# வைரமுத்து சிறுகதைகளில் கதைக்கரு

**பா. தீபா**
முனைவர் பட்ட ஆய்வானர்
கணேசர் கலை அறிவியல் கல்லூரி
மேலைச்சிவபுரி

தமிழ் இலக்கியக் களத்தில் கட்டுரையாளர், நாவலாசிரியர், கவிஞர் திரைப்படப் பாடலாசிரியர் என்னும் பன்முகத் தன்மைகொண்ட ஆளுமையாளர் வைரமுத்து. அவர், நவீன இலக்கியம் படைப்பதிலும் தேர்ந்தவர் என்பதை அவரது நாவல்களும் சிறுகதைகளும் அறிவிக்கின்றன. இக்கட்டுரை வைரமுத்துவின் சிறுகதைகளின் கதைக்கரு குறித்து ஆராய்கிறது.

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** II
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

படைப்பாளன் ஒரு படைப்பை உருவாக்குவதற்கு முன்பு அவன் மனத்தில் கதைபற்றிய உணர்வு குடிகொள்கிறது. அவ்வுணர்வு சமுதாயத்தில் அன்றாடம் நிகழ்வுகளில் இருந்து தனக்கான கருவைத் தேர்ந்தெடுக்கிறது. மா.இராமலிங்கம் “கதைக்கருதான் படைப்பாளனின் மனதில் முதன்முதலாக இடம் பெருகிறது. ஏனென்றால் கதைப் பொருளுக்கு உருவம் கொடுக்கும்போதே கதைப்பின்னல்இபாத்திரங்கள், பின்னணி ஏற்படுகின்றன”[1] என்பர். கதைக்கான கருவைச் சரியாகத் தேர்வு செய்யாவிட்டால் கதை அமைப்பும், பொருள் நோக்கும் சரியாக அமையாது. “கருப்பொருள் இல்லாவிடில் கதைப் போக்கின்றி கிடக்கும். கதை நிகழ்ச்சிகள் எவ்வெவற்றை எவ்வாறு சொல்லவேண்டும் கதை மாந்தருடைய பண்புகளுக்கு எவ்வாறு அழுத்தம் தரவேண்டும் எத்தகைய கூற்றுமுறையினைப் பயன்படுத்த வேண்டும் எவற்றைச் சொல்லலாம் எவற்றை விட்டுவிடலாம் என்பதை எல்லாம் ஆசிரியன் முடிவுகட்டுவதற்கு கருப்பொருளே உதவுகிறது”[2] என்று க.ரத்தினம் குறிப்பிடுவர்.படைப்பாளனின் படைப்புத் திறனுக்கு எத்தகைய சிறு நிகழ்வும் கதைக் கருவாகலாம். இரா.தண்டாயுதம் “கதைக்கான கருப்பொருளுக்காகத் தெருத்தெருவாக ஊர்ஊராகச் சுற்ற வேண்டும் என்பதில்லை கதைப் பொருளைப் பார்கின்ற பார்வை மட்டும் இருந்தால் ஒருவன் தன்னிலேயே நூற்றுக்கணக்கான கதைகளுக்கான கருப்பொருள்களை எளிதாக பார்க்கமுடியும்.”[3] என்று குறிப்பிடுவர். இத்தகைய சிறப்புமிக்க கதைக் கருவை வைரமுத்து இயல்பாக வாழ்வியல் கண்ணோட்டத்தில் அமைத்திருக்கிறார். வைரமுத்துவின் கதைக்கரு உருவாக்கத்திற்கான சூழலைச் சிறுகதைகளின் வாயிலாக உணர்த்துவது அவரது படைப்பின் நுட்பத்தைப் புலப்படுத்தும்.

‘தூரத்து உறவு’ என்னும் சிறுகதை, நவீன வாழ்க்கையில் பெற்ற பிள்ளைகள் பெற்றோரையே சுமையாக நினைப்பதைக் கருவாகக்கொண்டு படைக்கப்பட்டிருக்கிறது. நவீன வாழ்க்கை முறையில் கல்வி மற்றும் பொருளாதாரத்தை முன்னிறுத்தியே குழந்தைகள் வளர்க்கப்படுகிறார்கள். படிக்கும்போது கல்வியால் தனிமைப்படுகிறார்கள். வளரும் சூழல் குடும்பத்திற்கு எதிராக உறவுகளின் அருமை தெரியாமல் அமைகிறது. அதனால் அவர்களுக்குப் பெற்றோரிடம் அன்பு இயல்பாகவே குறைந்து காணப்படுகிறது. அத்தகையதொரு அவலமே தூரத்து உறவு சிறுகதையில் அழகான நோக்கில் எடுத்துக் காட்டப்படுகிறது.

தந்தையின் இறப்புக்காக அயல்நாட்டில் இருந்து தாய்நாடு திரும்பும் மகன், தந்தையின் இறுதிக் கடனை முடித்தபின்பு தாய் மட்டும் தனித்திருக்கும்நிலையில் சொத்தை விற்றுவிட்டு அம்மாவை முதியோர் இல்லத்தில் சேர்க்க நினைக்கும் மனநிலை கதையில் விளக்கம்பெருகிறது. பெற்று படிக்கவைத்து ஆளாக்கி அவனைச் சமூகப் பொறுப்பு மிக்கவனாக ஆக்கியபின் உறவுகளைச் சுமையாக நினைக்கும் போக்கு நவீன வாழ்க்கையில் பெருகுவதைக் கதைக்கரு வெளிச்சமிட்டுகிறது. அம்மாவின் இறுதிச்சடங்கில் அவன் கலந்துகொள்ளாமல் இணையத்தின் வழியாக இறுதிச்சடங்கைக் கண்டதாக வைரமுத்து பதிவு செய்திருக்கும் கருத்து, நடப்பியல் அவலத்தைத் தெளிவுபடுத்துகிறது. “பெசன்ட் நகர் மயானத்துக்கும் மென்ஹாட்டனுக்குமான 13462 கிலோமீட்டர் துரத்தில் ‘ஸ்கைப்பில் எரிந்து கொண்டிருந்தாள் அம்மா. ஆறிப்போயிடும் டீ சாப்பிடுங்க என்றாள் கௌ தன்கோப்பையை உறிஞ்சிக் கொண்டே.”[4] (தூரத்துஉறவு.ப.25).

காதல் உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவானது. உயர்திணைக் காதல் மட்டுமே கவனிக்கப்படுகிறது. அஃறிணைக் காதலும் அதன் உணர்வும் அவ்வளவாகப் புரிந்து கொள்ளப்படுவதில்லை. எல்லா உயிர்களுக்குள்ளும் மென்மையான காதல் உணர்வு உண்டு என்பதையும் அதன் தூய்மைத் தன்மையினையும் வைரமுத்து ‘நீரில் எழுதிய காதல்’ என்னும் சிறுகதையின் கருவாக அமைத்திருக்கிறார். இரண்டு மீன்கள் அணையில் இணைபிரியாத உறவுகளாக வாழ்கின்றன. காலச்சுழற்சியில் ஒன்றை ஒன்று பிரிந்து இறுதியாக ஒன்று மீன் வளர்க்கும் தொட்டியில் விடப்பட்டு இன்னொன்று குழம்புக்காக அறுக்கப்படுகிறது. இதனைக் கண்ட தொட்டியில் இருந்த மீனும் தன் துணையை இழந்த காரணத்தால் உயிர் விடுகிறது. கதை கற்பனை எனினும் அஃறிணைக்கும் உணர்வு உண்டு, காதல் உண்டு என்பதை வைரமுத்து எடுத்துரைக்கிறார். “பேயம்மாள் அரிவாள்மணை எடுத்து வந்த காட்சி தான் கீ கடைசியாய்ப் பார்த்தது, குழம்பு கொதிக்கும் சத்தம்தான் கடைசியாய்க் கேட்டது. மறுநாள் குழம்புக்கு அவள் தொட்டி மீன்களை எல்லாம் தொட்டுத் தூக்கியபோது எல்லா மீன்களும் உயிரோடிருந்தன. கீ மட்டும் செத்துக்கிடந்தது.”[5] (வைரமுத்து சிறுகதைகள்- நீரில் எழுதிய காதல்.ப.62)

மனித வாழ்க்கையில் இரக்கக் குணமே தலையாயது. மனிதனுக்கு மனிதன் உதவிக்கொள்வதே வாழ்வின் சிறப்பு என்பதை வைரமுத்து ‘வேதங்கள் சொல்லாதது’ என்னும் சிறுகதையில் கருவாக அமைத்திருக்கிறார். வேதங்கள், ஆச்சாரம், வழிபாடு எல்லாம் மனிதனாலேயே சிறப்படைகின்றன. மனிதனைத் துன்புறவிடுவதனால் அவற்றுக்குப் பெருமையில்லை என்பதையே சிறுகதை தெளிவுபடுத்துகிறது. நன்மை செய்பவர்களுக்குக் குலம் இல்லை. நற்குணம் உடையவர்கள் எங்கும் பிறப்பார்கள். ஆனால் தாழ்ந்தவர்கள் ஆகிவிடமுடியாது. குணமே உயர்ந்தது என்னும் சிந்தனை வேதங்கள் சொல்லாதது சிறுகதையில் வெளிப்படுகிறது.

தனிமரம் தோப்பாகாது என்பது பழமொழி. மனிதர்கள் ஒருவருக்கொருவர் இணைந்து செயலாற்றும்போது தான் சமுதாய நடவடிக்கைகள் உயிர் பெறுகின்றன. எந்நிலையிலும் மனிதனே மனிதனுக்கு உறவாக முடியும். இறுதிவரை அஃறிணைகள் துணையாக இயலாது என்பதை மனிதர்களால் ‘ஆனது வாழ்வு’ என்னும் சிறுகதை கருவாகக் கொண்டுள்ளது. கணவனால் கைவிடப்பட்டு உறவுகள் கசந்தபின் வளர்ப்பு பிராணியான பூனைமீது அன்பு கொண்டு தன் அன்பு முழுவதையும் பூனைக்கே செலவிடுகிறாள். ஒரு நாள் பூனை இறந்தபின்பு அவள் தனிமைக்கு உள்ளாகிறாள். ஊரார்கள் சுற்றியிருப்பவர்கள் யாருடனும் உறவின்றி ஒருநாள் அவளுடைய வாழ்க்கை முடிந்து போகிறது. எத்தனை இடர்கள் வந்தாலும் மனிதர்களோடும் உறவுகளோடும் சேர்ந்து வாழ்கின்ற வாழ்க்கைதான் இன்பம் தருவது என்னும் சிந்தனையை வைரமுத்து சிறுகதையின் இறுதியில் பதிவு செய்திருக்கிறார் “இளமையோ முதுமையோ உறவோ பகையோ பிராணி மட்டும் போதாது மனிதர்களுக்கு சொல்லிவிட ஆள் வேண்டும்.”[6] (மனிதர்களால் ஆனது வாழ்வு ப.187)

பசி வந்திடப் பத்தும் பறந்து போகும் அதாவது பத்து நற்குணங்களும் மனிதனைவிட்டுச் சென்றுவிடும். அதனாலேயே உணவு கொடுத்தவர்களை இலக்கியங்கள் உயிர் கொடுத்தவர்களாக மதிக்கின்றன. ‘இப்படியும் ஒருவன் இறந்தான்’ என்னும் சிறுகதையில் வைரமுத்து அரிசிமணி அரிசியை மட்டுமே தின்னும் பாத்திரம் சுடுகாட்டைக் காவல் காக்கும் வெட்டியானைச் சார்ந்து

வாழ்வான். கடுமையான பசியின் காரணமாக. பிணத்தின் வாயில் இருந்த வாக்கரிசியை எடுக்கப் பிணத்தின் வாயில் கையைவிட்டு அரிசியை எடுக்கும்போது எரிந்து கொண்டிருந்த பிணம் அவன் கையை கடிக்க எழுந்த பிணத்தைக் கண்டு அதிர்ச்சியில் இறக்கிறான். இறப்பு எந்த வகையிலும் வரும் என்னும் கருவை வைரமுத்து மாறுபட்ட கோணத்தில் கதையில் தெளிவுபடுத்தியிருக்கிறார். இதனைக் “கெஞ்ச நேரத்துல யாத்தேன்னு ஒரு சத்தம் கேட்டுச்சு. அவன் சத்தம்தான் ஓடிப்போய்ப் பாத்தா என் ஆயுசுக்கும் நான் மறக்க மாட்டேனய்யா நான் கண்ட கொடுமையை எரிஞ்சிக்கிட்டிருந்த பொணத்தோட வாயில் அவன் வெரல் இருக்கு. பொணம் அவன் கையைக் கடிச்சுக்கிட்டே எந்திரிக்குது அலறித்துடிக்கிறான் பயித்தியக்காரப்புள்ள பசி பொறுக்காம வாய்க்கரிசியைத் திங்கலாம்னு பொணத்து வாயில கைய விட்டிருக்கான் திடீர்னு எந்திருச்சு பொணம் அவன் விரலக் கடிச்சுக்கிட்டு வாயமூடிருச்சு. இழுத்திழுத்து பார்க்கிறான். பொணம் விரல விடல நான் இவன இழுக்க பொணம் அவன் வெரல இழுக்க….கடைசியில் விரலப் பொணத்து வாயில விட்டுட்டு வெளியில வந்து விழுந்தான். விழுந்தவன் பேயடிச்சே செத்துப்போனான். அது தெரியக் கூடாதுன்னுதான்…”[7](இப்படியும் ஒருவன் இறந்திருக்கிறான்.ப.215).

வரலாற்றின் பக்கங்களின் உண்மைகள் மறைக்கப்படுகின்றன. சமூக வரலாறு என்பது சாதாரண மக்களின் வரலாறாகும். ஆனால் ஆட்சி அதிகாரம் படைத்தவர்கள்தான் வரலாற்றில் இடம்பெறுகிறார்கள். பலரின் வாழ்வு அர்த்தம் ஏதும் இன்றி முடிந்துபோகிறது. இதனை வைரமுத்து ‘ஏழையின் தாஜ்மஹால்’ என்னும் சிறுகதையின் கருவாக உணர்த்தியிருக்கிறார். தாஜ்மஹால் காதலின் சின்னமாகப் போற்றப்படுவது. ஷாஜஹான் மும்தாஜின் நினைவாகக்கட்டியது. ஆனால் அது ஏழையின் காதல் ஒன்றின் சின்னமாக இருப்பது புதிய செய்தி. இப்ராஹிம் என்பவன் தன் காதலியை இழந்து பைத்தியம் ஆனவன் தாஜ்மஹால் பணி நடைபெற்றபோது அவன் காதலி அங்கு பணி செய்தவள். அவளின் இறப்புக்கான காரணம் இரண்டு நிலைகளில் அவனால் கதையில் சுட்டிக் கூறப்பட்டுள்ளது. “அவளோ இந்தக் கல்லறைக்கு மண் சுமந்தாள். காதல் வெறியோடு திரும்பி வந்தேன் காணவில்லை என் கண்மணியை. பூமியெல்லாம் தேடிப்பார்த்தேன் அவளோ பூமிக்கடியில் புதைக்கப்பட்டிருந்தாள் எங்கு தெரியுமா? இதோ இந்த தாஜ்மஹாலின் அஸத்திவார ஆழத்தில் இந்தத் தாஜ்மஹாலில் மும்தாஜுக்கு முன்பே புதைக்கப்பட்டவள் என் ஆசை அலிமாதான். அவளைப் பலியிட்டது உங்கள் கட்டடக் கலையின் மூடநம்பிக்கையா? இல்லை உங்கள் அதிகார வர்க்கத்தின் காமச் சேட்டையா? எதுவென்று தெரியாது”(ப.42) இக்கூற்று தாஜ்மஹாலின் உருவாக்கத்தில் ஏழைக்காதல் பலியிடப்பட்ட செய்தியை அறிவிக்கிறது. வைரமுத்து புதுமையான நோக்குடன் ஏழையின் காதலையும் தாஜ்மஹாலுக்கு நிகராக எடுத்துக்காட்டியுள்ளார்

பார்வையற்றவர்களின் வாழ்க்கையை மையமாகக்கொண்டு ‘பகல் இருட்டு’ என்னும் தலைப்பில் அமைந்த சிறுகதை, பார்வையற்றவர்கள் நகர வாழ்வியல் சூழலில் படுகின்ற துன்பத்தை எடுத்துக்காட்டுவதாய் அமைகிறது. இந்தியாவில் உள்ள பார்வையற்றவர்களின் எண்ணிக்கை எழுபது லட்சம் என்னும் கருத்தை இக்கதையில் வைரமுத்து உணர்த்தியுள்ளார். கண்பார்வை உள்ளவர்கள் கண்பார்வை இல்லாதவர்களுக்கு உதவ வேண்டும். ஆனால் அவரவர் தன்பணியைச் செய்வதிலேயே இருக்கிறார்கள். பிறரைக் கண்டுகொள்ள நேரம் இல்லை என்பதை வைரமுத்து உணர்த்துகிறார். சாலையைக் கடப்பதற்காக காத்திருக்கும் பார்வையற்றவனைக் கண்டு பிறர் இரக்கம் கொள்கிறார்கள். ஆனால் அவனுக்கு உதவ யாரும் தயாராய் இல்லை என்பதைக் கதைக்கரு உணர்த்துகிறது. காரில் செல்லும் பணக்காரர்இ சிறுமிஇ வெளிநாட்டார், காவல்துறை அதிகாரி என இத்தனை பேர்களின் கண்ணில் படும் பார்வையற்றவன், சாலையைக் கடக்கத் தடுமாறுகிறான். இறுதியாகப் போக்குவரத்துக் காவலர் அவன் கையைப் பிடித்துச் சாலையைக் கடக்க உதவுகிறார். எனினும் மேலதிகாரியைக் கண்டதும் அவனைக் கைவிடுகிறார். அந்நிலையில் பார்வையற்றவனுக்கு மற்றொருவன் உதவி சாலையின் மறுபுறம் விடுகிறான். அவர்கள் இருவருக்கும் நடைபெறும் உரையாடலின் சாரமே கதையின் முக்கியப் பகுதியாக அமைந்திருக்கிறது. “நடுச் சாலையில் இருந்து தன்னை மீட்டெடுத்து வந்தவனுக்குப் பார்வையற்றவன் நன்றி என்றான். உதவி செய்தவன் பரவாயில்லை நீங்கள் கைவிடப்பட்டவராய் இருக்கவேண்டும் என்ற அனுமானம்தான் என்னை உதவி

செய்யத் தூண்டியது என்றான். “எனக்கு இன்னொரு உதவி செய்யவேண்டும் என்றான் பார்வையற்றவன். என்ன? என்றான் உதவி செய்தவன் “இப்போது நாம் எந்தச் சாலையில் நிற்கிறோம். படித்துச் சொல்ல முடியுமா? என்றான் பார்வையற்றவன். உதவியவன் சொன்னான் மன்னிக்க வேண்டும் உங்களுக்குப் தான் தெரியாது எனக்குப் தெரியாது.” (ப.100).உடல் உறுப்புகள் நன்றாக அமையப்பெற்றவர்கள் உடல் குறைபாடு உள்ளவர்களுக்கு உதவவேண்டும். ஆனால் சாலையைக் கடப்பவர்கள் எண்ணற்றவரகள் இருந்தும் இறுதில் பார்வையற்ற ஒருவவே பார்வையற்றவனுக்கு உதவும் சூழலை வைரமுத்து நுட்பமாக எடுத்துக்காட்டியுள்ளார். மனிதாபிமானம் குறைந்து வருவதையும் உதவும் பண்பு குறைந்து வருவதையும் வைரமுத்து கதைக்கருவாகப் பதிவு செய்துள்ளார்.

வைரமுத்துவின் சிறுகதைகளின் கருக்கள் வாழ்வியலைக் கருவாகக்கொண்டு சிறக்கின்றன. இயல்பான வாழ்வியல் கண்ணோட்டம், மனிதர்களின் உறவுகள், அவர்கள் மனிதர்களுடன் கொள்ளும் உறவு, ஒருவருக்கொருவர் செய்துகொள்ளும் உதவி, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, குடும்ப உறவில் வரும் சிக்கல்கள் முதலான களங்களை வைரமுத்துவின் சிறுகதைகளின் கரு தொட்டுச் செல்வதாக அமைந்திருக்கிறது. கரு கதைப்பின்னல், உத்திகள், கதைகூறும்முறை முதலான களங்களில் வைரமுத்துவின் சிறுகதைகள் தனித்தன்மை உடையனவாக மிளிர்கின்றன.

**துணை நூல்கள்**

1. மா. இராமலிங்கம். தமிழ் நாவல் இலக்கியம் தமிழ் புத்தகாலயம் சென்னை. 1972
2. தண்டாயுதம் இரா.பாரதி முதல் சுஜாதா வரை தமிழ்ப் புத்தகாலயம் சென்னை. 1985.
3. R.Summers, Graft of the short story Newyork, 1948.